# திருக்குறளில் சொல்லாட்சித் திறன்

**திவ்ய ஸ்டெபினா அ**

**ஆங்கிலத் துறை மூன்றாம் ஆண்டு 'ஆ' பிரிவு**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**

**திருச்சிராப்பள்ளி 620 002**

5

**ஆய்வுச்சுருக்கம்**

ஒருவரின் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவது மொழி. சொற்களை இலக்கண வரம்பிற்குட்பட்ட வாக்கியங்களில் அமைத்து நம் கருத்தை நாம் வெளியிடுகின்றோம். ஆனால் சிறந்த இலக்கியங்களை உருவாக்கும் படைப்பாளர்கள் சரியான சொல்லைப் பொருத்தமான இடத்தில் அமைத்துத் தம் கருத்துகளை அழகாகவும் செறிவாகவும் தெரிவிக்கின்றனர். கவிஞர்கள் சொல்லவரும் செய்திகளைச் சற்றே நயத்தோடு சுற்றிவளைத்துச் சொல்லுவதுண்டு. உரைநடையில் காண்பது போல் நறுக்குத் தெரித்தாற்போல ; கவிதை நடையில் கருத்துக்களைச் சொல்வது இலலை. ஆனால் வள்ளுவரோ தான் படைத்த குறளின் புதிய சொல்லாட்சி, எண்ணுப்பெயரைக் குறிக்கும் சொற்கள், பரத்தமையைக் குறிக்கும் சொற்கள்,பெண்கள் குறித்த புதிய சொற்கள், வடமொழிச் சொற்கள் போன்றவறறை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது. சொல் ஆளுமை திருவள்ளுவர் தமது திருக்குறளில் வெல்லும் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

**முன்னுரை**

ஒரு குறளில் அமைந்த ஒரு சொல்லை மாற்றினாலும் அதன் பொருள்சிதையும்படி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு மொழியில்தட்டுத் தடுமாறாமல் பேசவேண்டுமென்றால், அவர் அம்மொழியில்மிகுதிறன் உடையவராகத் திகழவேண்டும் அதுபோலவே ஒரு படைப்பாளனும் அவனது மொழியிலுள்ள மிகுதியான சொற்களை அறிந்தவராகவும், அவற்றை ஆளும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். திருவள்ளுவரும் அத்தகைய மொழிப்புலமையோடு, சொற்களை நன்கு அறிந்து, அவற்றுள் சிறப்புடையனவற்றை, நல்லனவற்றைப் பண்பானவற்றை எடுத்து ஆளும்

சொல் ஆளுமை திறன் உடையவராகத் திகழ்கின்றார் என்பது புலனாகிறது.

திருவள்ளுவரின் சொல் ஆளுமைத் திறனை மூன்று வகையாகப் பகுக்கலாம் . அவை

அ. சொல்லாட்சி

ஆ. சிறந்த கவிதை

இ. புதிய சொல்லாட்சி

என்பனவாகும். சொல்லாட்சி என்பது சொற்களின் பொருளைக் காட்டுகின்றது என்றாலும் அச்சொற்களின் ஊடே விளங்கும் பொருளின் நயத்தையும் விளக்குவதாகும். சொற்களைத் திறன் தெரிந்து, பிறசொல் நிலை உணர்ந்து உரியவாறு பயன்படுத்துவதனை வள்ளுவர், நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று (குறள்.641) என்னும் குறளில் எடுத்துக்கூறி ஒருவன் மற்றொருவனிடம் பேசுவதில் உள்ள திறமை சொல்வன்மைக்கு மட்டுமே எனக் குறிப்பிடுகிறார். இதனை, திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும் பொருளும் அதனின்ஊங்கு இல் (குறள் 644) என்னும் குறளிலும். சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது (குறள்.647) என்னும் குறளிலும் வள்ளுவர் சொல்லாட்சியின் சிறப்புகளைப் பற்றிக் கூறியுள்ளார். அந்தணர் தண்ணளி (கருணை) மிக்க அருளாளர்களிடம் ஒரு பொலிவு காணப்படும். அது பிறரை வணங்க வைக்கும் அரசர், வணிகர், வேளாளர் என ஒரு பிரிவினை பேசிக்கொண்டனர் எனத் தெரிகிறது. இதனை, நூலே கரகம் முக கோல் மணையே ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய1 என்னும் நூற்பாவில அந்தணரைக் குறித்தும். 'படையும் கொடியுங் குடையும். முரசும் நடைநவில் புரவியும் களிறுந் தேரும் தாரும் முடியும் நோவன பிறவும் தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய"2 என்னும் நூற்பாவில் அரசரைக் குறித்தும். 'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"3 என்னும் நூற்பாவில் வணிகரைக் குறித்தும். 'வேளாண் மாந்தர்க் குழுதூணல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"4 என்னும் நூற்பாவி அரசரைக் குறித்தும் தொல்காப்பியம் விளக்குகிறது.

வருணாசிரம தருமத்தை அடியொட்டி மறுப்பவராகிய திருவள்ளுவர், தமிழர்களைப் பார்த்து, ஒருவனது உயர்குலம் - குடிப்பிறப்பு என்பது அவனது ஒழுக்கத்தினால் மட்டுமே அமையும். ஒழுக்கம் தவறினால் அது இழிந்த பிறப்பு ஆகிவிடும் என்று உறுதியாகச் சொல்கிறார். திருவள்ளுவர் வான்சிறப்பை அடுத்து மக்கள் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பதற்கு நீத்தார் பெருமையை வைத்துள்ளார் என்று பா.நடராஜன் கூறுகிறார். இதனை, 'பொருளியலுக்கு அடிப்படையான வான் சிறப்பினை அடுத்து மக்கள் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருப்பது தமக்கென வாழா அந்தணாளர் பெருமையே யாகும்"5 என்ற கூற்றின் மூலம் அறிய முடிகிறது . அறநெறிப்படி வாழ்பவர் அந்தணர் ஆவர். ஏனெனில் அவர்கள் எல்லா உயிர்களிடத்திலும் செவ்விய கருணையை மேற்கொண்டு ஒழுகுவார்கள் என்பதை, அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் (குறள்.30) என்னும் குறளின் மூலம் அறியமுடிகின்றது.

இக்குறளுக்குப் பழைய உரையாசிரியர் அ.மா.பரிமணம், 'எலலாவுயிரும் தன்னுயிர்போல எண்ணி அன்புந் தயவும் கிருபையும் இரக்கமும் வைத்துப் பார்க்கு நல்லோர்களே அந்தணர் என்பதாயிற்று. ஆதலால் அந்தணர் என்னும் பேர் பொருந்தினவர் தர்மகர்த்தரே யல்லது மற்றப் பிராமணர் முதலான பேர்களுக்கு அந்தணரென்னும் பேர் வரமாட்டாது சாதி அந்தணர் ஆகுமாம்6 என்கிறார் இதனையே பரிமேலழகர், 'எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தில் நின்றவர்"7 என்று உரையெழுதுகிறார். தமிழண்ணல் அந்தணர் என்பதற்கு "அந்தணர் என்பது குலப் பெயராகவும் ஆளப்படும். திருவள்ளுவர் அச்சொல்லுக்குப் புதுவிளக்கம் தருவதில் இருந்து அவருக்குப் பிறப்பால் வரும் குலத்தில் நம்பிக்கையின்மை வெளிப்படுகிறது. இதுபோல சொற்பொருள் விளக்கமாக இலக்கணமாகக் கூறும் இடங்கள் சிலவுள, அவை பழைமையை மாற்றியப் புதுப்பார்வை தருவன"8 என்று விளக்கம் தருகிறார். இக்கூற்றுகளில் இருந்து உயிர்க்கொலை புரியாது, எவ்வுயிர்களுக்கு செந்தண்மையாம் தண்ணளியைப் (கருணையை) 174 பூண்டு ஒழுகுபவரே அந்தணராவார் என்பது புலனாகிறது. இவற்றிலிருந்து வள்ளுவர் தம்குறளில் அந்தணர் என்னும் சொல்லைக் கையாண்டுள்ள

திறம் புலப்படுகின்றது. ஆனால் ஆனால் என்ற சொல்லோடு சில வாக்கியங்கள் தொடங்குவதாக அமைக்கப்படுகின்றது. சங்க காலத்தில் இவ்வாறு வருதல் இல்லை. இச்சொல் மிகப் பிறப்படடது. வள்ளுவர் தான் இதனை முதன் முதல் வழங்குகின்றார்.

இதனை, இல்லதுஎன் இல்லவள மாண்பானால் உள்ளது என் இல்லவள் மாணாக் கடை (குறள்.53) என்னும் குறளின் மூலம் அறியமுடிகின்றது. இங்கே 'ஆனால்" எச்சப்பொருளில் வந்துள்ளது. வாக்கியப் பகுப்பினாலே'ஆனால்" என்பதைத் தனிப்பட எடுத்துக் கொண்டு புதிதாக ஒரு வாக்கியத்தை அமைக்கும் முறை தற்காலத்தில்தான் ஏற்பட்டது. ஒரு சில தமிழ்ச்சொற்கள் விகாரப்பட்டுப் புதுவடிவம் கொண்டு முடிவில் புதுச் சொல்லாக அமைவதும் உண்டு. எடுத்துக்காட்டாக வழுத்துதல் என்ற சொல்லைக் கூறலாம். இது வாழ்த்துதல் என்பதன் திரிபு. வள்ளுவப் பெருந்தகை, வழுத்தினாள் தும்மினேனாக அழித்துஅழுதாள் யார்உள்ளுதித தும்மினீர் என்று (குறள்.1317) என்னும் குறளைக் கூறியுள்ளார். இக்குறளுக்குப் பரிமேலழகர் கூடியிருக்கின்றவள் யான் தும்மினேனாகத் தன் இயற்கை பற்றி வாழ்த்தினாள் அங்ஙனம் வாழ்த்திய தானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலால் தும்மினீர்? என்று சொல்லிப் புலந்தழுதாள் என்கிறார். பரவும் பழிச்சும் பொருள்9 எனவரும் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாவிற்கு உரையெழுதிய தெய்வச்சிலையார் உரையும் இதனைத் தெளிவாக்குகின்றன. தெய்வம் தொழாஅள கொழுநன் தொழுதெழுவாள் பெய்எனப் பெய்யும் மழை (குறள்.55) என்னும் குறளில் பெய் என்னும் சொல் இரண்டு இடங்களில் வந்து இதற்கு ஒரு கவர்ச்சியைத் தந்து நிற்பதைக் காண முடிகிறது.

ஒரே சொல்லின் ஆட்சியை வைத்துப் பல குறள்கள் ஆக்கப்பட்டுள் ளவை உணரத்தக்கது. மேலும். உதவி வரைத்துஅன்று உதவி உதவி செயப்படடார் சால்பின் வரைத்து (குறள்.105) என்ற குறளும் இப்பண்பு கொண்டவை பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்குத் தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுது எழுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்பது பொருள். உரையாசிரியர்கள் பலரும் இப்பொருளைக் கையாண்டுள்ளனர். பழைய உரையாசிரியர்களில் மணக்குடவர், பரிதி, காளிங்கர், பரிமேலழகர், கவிராசர், போன்றறோரும் புதிய உரைகாரர்களில்

சாரங்கபாணி, ச.வே.சுப்ரமணியன், பொற்கோ போன்றோரும் இத்தகைய நிலையைக் கையாண்டுள்ளனர். சங்க இலக்கியமான கலித்தொகையிலும் சிறந்த கற்பினையுடைய பெண்கள் வறண்ட காலத்தில் மழை பெய்யச் செய்யும் திறனுடையவர்கள் என்னும் கருத்து அமைந்துள்ளது. இதனை, 'வறனோடின் வையகத்து வான்றரும் கற்பினாள்"10 என்னும் அடிகளால் அறியலாம் சிலப்பதிகாரத்தில், 'வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது நீணில வேந்தர் கொற்றம் சிதையாது பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"11 எனக்கூறுவது காணத்தக்கது. இது போன்றே மணிமேகலையும், வான் தரும்'வான் தரும் கற்பின் மனையுறை மகளிரின்"12 என்றும், திருவள்ளுவரின் சொல்லோவியத்தில் மயங்கி அதே சொற்களைப் பயன்படுத்தியதைத், 'தெய்வம் தொழாஅள் கொ ழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றுஅப் பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"13 என்று கூறுவதைக் காணமுடிகிறது. இதே நிலையை வளையாபதியிலும் காணலாம் என்பதை, 'நாடும் ஊரும் நனிபுகழ்ந்து எத்தலும் பீடுறும் மழை பெய்யெனப் பெய்தலும்" என்று கூறிச்செல்கின்றது. இவ்வாறு பல்வேறு இலக்கியங்களும் கற்புடைய பெண்கள் மழை பெய் என்று சொன்னால் மழை பெய்யும் எனப் பொருள் கண்டது அறியமுடிகின்றது.

பணிதல் மனிதன் தன்னுடைய பண்பு நிலைகளிலும் அறிவு நிலைகளிலும், செயல் நிலைகளிலும் உயர்வு பெறப் பல சிந்தனைச் சுடர்களைப் பரப்பி மானுடத்தை வெளிச்சமாக்க முற்பட்டவர் திருவள்ளுவர். தனிமனித ஆளுமை நிலையில் உயர்வு பெற வள்ளுவர் பணிதல் என்னும் அடக்கப் பண்பைக் கூறுகிறார். அந்த அடக்கப் பண்பு எப்படி அமையவேண்டும் யாருக்கெல்லாம் இருக்க வேண்டும் என்பதைக் கூறவந்த வள்ளுவர், எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து (குறள்.125;) என்று விளக்கம் தந்துள்ளார். இக்குறளில் உள்ள பணிதல் என்ற சொல் குறித்து ச.அகத்தியலிஙகம், 'பணிதல் என்ற சொல் இங்கு கவனிக்கும் நிலையில் பணிவு என்று கூறியிருக்கலாம். இது உயர்வு என்பதுடன் ஒத்து அமைந்திருக்கும் யாப்புக்கும் பொருந்துவதுதான். பரிமேலழகர் தன்னுடைய உரையில் பணிவு வேண்டும் என்றே எழுதுவார். ஆனால் பணிதல் என்ற சொல் உணர்வுடன் பணியவேண்டும் என்ற எண்ணத்துடன் பணிதல் தொழிலைக் காட்டுவதும் பணிவு என்ற சொல் அத்தனை 177

அளவுக்கு இல்லாமையும் குறிப்பிடத்தக்கது. இதனால் தான் வள்ளுவர் பணிதல் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார் என்று விளக்கம் தருகிறார்.

செல்வம், கல்வி, பதவி ஆகியவற்றால் மட்டுமின்றி மனிதன் நடந்துகொள்ளும் முறையாலும் மதிப்பு உண்டாகும். அறநெறியைப் போல மனிதனின் நடைநெறியும் முதன்மை பெறுகிறது. செல்வத்தால், கல்வியால், பதவியால் ஒருவன் தன்னை உயர்வாகக் கருதும்போது அது அகந்தையாக முடிவதற்கு வாய்ப்புகள் அதிகம். அந்த அகந்தையிலிருந்து விடுபட்டு மானுடம் மகத்துவம் பெற வேண்டியபணிதலாகும் இப்பண்பு உடையவர்களால் உலகம் நிலைபெற முடியும். பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் பார்க்காமல் எல்லோரிடமும் இனிமையாகவும், பணிவாகவும், நடந்தால் பலரும் போற்றி மகிழ்வர். அம்மகிழ்ச்சியில் பலரும் ஒருவரை அணுகி உதவிகள் பெற்று உயரமுடியும். செல்வந்தரிடமும் அடக்கப் பண்பு இல்லையென்றால் அச்செல்வத்தால் பயனில்லை. வள்ளுவர் தம் குறளில் ‘பணிதல்’ என்னும் சொல்லைக் கையாண்டுள்ள சொல்வன்மையை இதன் மூலம் அறியமுடிகின்றது. எழுமையும் ஏமாப்பு மனிதனின் விருப்பம் சமுதாய நெறிகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது. மனிதன் ஒழுக்கத்தோடு செயல்பட வேண்டுமானால் புலன் அடக்கத்தோடு செயல்படவேண்டும். அவ்வாறு புலனடகத்தோடு செயல்படும் போது மனிதன் எவ்வித விருப்பத்திற்கும் முதன்மை தராமல் அறிவுக்கு முதன்மை தர வேண்டும் . அந்த அறிவை விரிவு செய்ய நமக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்கள் உள்ளன. இப்புலன்களின் வழி உணர்வுகளை அனுப்பாமல் அறிவு நிலையில்கட்டுப்படுத்திச் செயல்பட வேண்டும்.

**தொகுப்புரை**

மனித வாழ்க்கை சிறப்படைவதற்குரிய அடிப்படையில் உண்மைகளையும், உணர்வுகளையும் குறள் வழியில் வெளிக்காட்டியவர் திருவள்ளுவர். இவர் தமது திருக்குறளில் வெல்லும் சொல்லைப் பயன்படுத்துகிறார். ஒரு குறளில் ஒரு சொல்லை மாற்றினாலும் அதன் பொருள் சிதையும்படி குறள் நூல் இயற்றப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு மொழியி தட்டுத் தடுமாறாமல் பேசவேண்டும் என்றால், அம்மொழியில் மிகுதிறன்

உடையவராகத் திகழவேண்டும்அதுபோலவே ஒரு படைப்பாளனும் அவனது மொழியிலுள்ள மிகுதியான சொற்களை அறிந்தவராகவும், அவற்றை ஆளும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். திருவள்ளுவரும் அத்தகையை மொழிப்புலமையோடு, சொற்களை நன்கு அறிந்து அவற்றுள் சிறப்புடையனவற்றை, நல்லவனவற்றைப், பண்பானவற்றை எடுத்து ஆளும் சொல் ஆளுமை திறன் உடையவராகவும் திகழ்கிறார் என்பது புலனாகிறது. வள்ளுவர் காலத்தில் அந்தணர் என்போர் பிறப்பினால் உயர்குலத்தர் என்று அழைக்கப்படடனர். ஆனால் வருணாசிரம தருமத்தை அடியொடு மறுப்பவராகிய திருவள்ளுவர் தமிழர்களைப் பார்த்து ஒருவனது உயர்குலம், குடிப்பிறப்பு என்பது அவனது ஒழுக்கத்தினால் மட்டமே அமையும். ஒழுக்கம் தவறினால் அது இழிந்த பிறப்பு ஆகிவிடும் என்ற அவரின் புதிய சிந்தனை போற்றுதற்குரியதாகும். திருவள்ளுவர் தம் குறள்களில் அல்லால், ஆனால், பணிதல், எழுமையும் ஏமாப்பும், ஒட்பம், சிரிப்பு, கவரிமான், கீழ், ஊடுதல் போன்ற சிறந்த சொற்களைப் பயன்படுத்தியிருப்பது அவரின் சொல்லாட்சித்திறனுக்கு சான்றாக அமைகின்றது என்பது குறித்தும் விளக்கப்படடுள்ளது. திருக்குறளில் அமைந்துள்ள தொடரமைப்புகளில் வள்ளுவர் பயன்படுத்திய அல்லால், அவ்வித்து, அவ்வது, உறை போன்ற புதிய சொல்லாட்சிகளையும், பழைய புதிய பண்புகளையும் காணும்போது சிறப்பான பொருள் விளக்கத்திற்காகவும் சமூக அமைப்பில் அவை சென்று சேர்ந்து நிலைபேறு கொள்வதற்காகவுமே இத்தகைய பாஙகினைக் கையாளுகிறார் என்பதை அறியமுடிகிறது. காலத்தை வெல்லும் புதிய சொற்களையும் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார் என்பது குறித்தும் புலப்படுத்தப்பட்டுள்ளது

**சாண்றெண் விளக்கம்**

1. நச்சினார்க்கினியர், (உ.ஆ.) தொல். பொருள்.மரபியல். நூ.623
2. மேலது. நூ.624
3. மேலது. நூ.631
4. மேலது. நூ.634

5. பா.நடராஜன், வள்ளுவர் தந்த பொருளியல் ப.24

6. அ.மா.பரிமணம் (ப.ஆ), திருக்குறள் பழைய உரை அறம். ப.8

7. பரி. உரை, திருக்குறள், ப.21

8. தமிழண்ணல், வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம், ப.22

9. சேனாவரையர் (உ.ஆ) தொல்.சொல். உரி. நூ.382

10. நச்சினார்க்கினியர் (உ.ஆ) கலி.குறிஞ்சிக் கலி, பா.15. 20-வது வரி

11. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை. சிலம்பு. அடைக்கலக் காதை, 145-147 அடிகள்

12. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை. மணி. விழாவறைகாதை 15:7

**பார்வை நூல்கள்**

திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18 . நான்காம் பதிப்பு - 1986